## அப்பாவை காணோம் என்றீர்கள்; அவர் வருகிறபோது நீங்களெல்லாம் இங்கே இருக்கமாட்டீர்கள்!

### எங்கள் ஆட்சியில் வந்த 5 பேரிடர்களில் இருந்து

# எந்தச் சேதாரமும் இல்லாமல் தமிழ்நாட்டை காப்பாற்றியவர் எங்கள் தலைவர்!

## சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பேச்சு!

சென்னை, ஆக. 19-

**சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பேசிய முன்னாள் அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், "அப்பாவை காணோம் என்றீர்கள்' அவர் வருகிறபோது, நீங்களெல்லாம் இங்கே இருக்க மாட்டீர்கள்" என்றும் "எங்கள் ஆட்சிக் காலங்களில் வந்த 5 பேரிடர்களில் இருந்து எந்த சேதாரமும் இல்லாமல் தமிழ்நாட்டை காப்பாற்றியவர் எங்கள் தலைவர்" என்றும் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தைத் தொடங்கி வைத்து கழக உறுப்பினர் - முன்னாள் அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் தன் நீண்டநாள் பொதுவாழ்வில் தமிழ்நாட்டை அங்குலம், அங்குலமாக கட்டியெழுப்பிய தலைவர் கலைஞர்; ஒரு மகத்தான சமூக நீதி தலைவர் கலைஞர்; (மேசையைத் தட்டும் ஒலி) விளிம்பு நிலையில் வாழ்ந்த கோடிக்கணக்கான மக்களின் கல்வி, பொருளாதாரம் வாழ்க்கை நிலையை அடியோடு மாற்றிய மாபெரும் தலைவர் கலைஞர்; (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் சமூகத்தில் மட்டுமல்லாமல், நில உரிமையிலும், சமூக நீதியை நிலைநாட்டிய தலைவர் மற்றும் நில உச்சவரம்பு தொடங்கி இலவச வீட்டுமனைப் பட்டா வரை ஏழை, எளிய மக்களின் நிலம் சார்ந்த கனவுகளை நிறைவேற்றியத் தலைவர் கலைஞர் அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கலைஞரை நான் வணங்கி எனது உரையை ஆரம்பிக்கின்றேன்.

மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர், பேரறிஞர் அண்ணா இல்லை என்று நினைத்தோம், கவலை அடைந்தோம்; ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் இல்லையென்று நினைத்தோம், கவலை அடைந்தோம்; இந்தத் தலைவர்கள் எல்லாம் இல்லாவிட்டாலும் இவர்களின் மொத்த உருவமாக எங்களுக்குக் கிடைத்த வழிகாட்டும் தலைவராகவும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுமை மிக்கத் தலைவராகவும், தந்தையைப்போல் தமிழ்நாட்டை செதுக்கி, செதுக்கி 11.19 சதவிகித வளர்ச்சியுடன் இந்தியாவின் முதன்மை மாநிலமாக உயர்த்தியத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை நான் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தலைவர் கலைஞர் அவர்களின் கொள்கைப்பிடிப்பும், தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் செயல்திறனும், ஒருங்கே பெற்று, எந்த ஆதிக்கத்திற்கும் அஞ்சாமல், எதையும் துணிவோடு எதிர்கொண்டு, எங்களுக்கு நம்பிக்கையூட்டும் இளந்தலைவர் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை நான் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய 28 வது வயதில் இந்தச் சட்டமன்றத்திற்குள் நுழைந்தேன்.

இன்றைக்கு பத்தாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக நான் தேர்வு செய்யப்பட்டிருக்கிறேன். அதற்காக என்னுடைய அருப்புக்கோட்டை தொகுதி மக்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். பத்தாவது முறையாக வெற்றி பெறுவதற்கு எனக்கு இடம் ஒதுக்கி கொடுத்த, தலைவர் அண்ணன், தளபதி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கொறடா, துணைக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சொன்னதை எதையும் நிறைவேற்றவில்லை!**

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய சிரம் தாழ்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வருவாய்த் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பினை நான் படித்துப் பார்த்தேன். ஒரு மாறுதல் வேண்டும், மாறுதல் வேண்டும் என்று சொல்லி, நீங்கள் நம் நாட்டு மக்கள் மத்தியில் வாக்கு கேட்டீர்கள். நான் அந்தப் புத்தகம் முழுவதும் படித்து பார்த்தேன். சென்ற முறை கிட்டத்தட்ட 400 பக்கங்கள் கொண்ட கொள்கை விளக்கக் குறிப்பை நாங்கள் பதிவு செய்திருந்தோம். இதிலே 100 பக்கங்கள் இன்றைக்கு குறைந்திருக்கின்றன. குறைந்ததற்கு காரணம், கொள்கை குறைந்து விட்டதா அல்லது கொள்கையிலே உங்களுக்கு குறைபாடு இருக்கிறதா என்பதையெல்லாம் அமைச்சர் அவர்கள் பேசும்போது சொல்ல வேண்டும். நீங்கள் மாறுதல் வேண்டும் என்று சொன்னீர்கள்.

இலட்சியங்கள் குறைந்ததா, இல்லையா என்பதை இந்த மூன்று மாத காலத்திலே மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சொல்லியதில் எதையும் இன்றைக்கு நிறைவேற்றிக் காட்டவில்லை. நீங்கள் எதையெல்லாம் சொன்னீர்களோ, உதாரணத்திற்கு பட்டா வழங்குவதில் ஆட்சேபணை இல்லாத நிலங்களுக்கு எல்லாம் பட்டா வழங்குவோம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார் என்று சொல்லி, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்களுடைய தலைவர், கலைஞர் அவர்கள் 2000 ஆம் ஆண்டிலேயே ஆட்சேபணை இல்லாத நிலங்களுக்கெல்லாம் பட்டா வழங்கலாம் என்று சொல்லி, சட்டம் கொண்டு வந்தவர் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**கொள்கை ரீதியாக சிறந்த கட்சி தி.மு.க.!**

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தளவிற்கு, இந்தக் கட்சிக்கு வயது 75. ஒவ்வொருவரும் அனுபவம் பெற்றவர்கள், ஒவ்வொருவரும் போராட்டக் களத்தில் போராட்டங்களைச் சந்தித்தவர்கள்; ஒவ்வொருவரும் சிறைச்சாலைக்கு சென்றவர்கள்; ஒவ்வொருவரும் பொதுமக்களை அன்றாடம் சந்தித்தவர்கள்; அப்படி வளர்ந்த கட்சி, இந்தக் கட்சி. ஆகவே, இந்தக் கொள்கை ரீதியாக இந்தக் கட்சி எல்லாவகையிலும், எல்லோரையும்விட சிறந்த கட்சி என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் பணிவன்புடன் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற எங்களுடைய ஆட்சியில், ஐந்தாண்டு காலத்தில் 27 இலட்சம் நபர்களுக்கு நாங்கள் அரசு மனைப் பட்டா வழங்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 27 இலட்சம்; இது சரித்திரத்திலே இல்லாத எண்ணிக்கை. அதற்கு காரணம், எங்களுடைய முதலமைச்சராக இருந்த அண்ணன் தளபதி அவர்கள், எங்களை அழைத்து எந்த ஏழைக்கும் பட்டா இல்லாமல் இருக்கக்கூடாது. வீடு இல்லாத மனிதராக இருக்கக்கூடாது என்று சொல்லியதன் விளைவாக, 27 இலட்சம் நபர்களுக்கு நாங்கள் பட்டா வழங்கினோம். அதைவிட சென்னை போன்ற மாநகராட்சிகளில், 30 ஆண்டுகாலம், 40 ஆண்டுகாலமாக குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க முடியாமல், எதையுமே செய்ய முடியாமல் இருந்ததை மாற்றி, அதை belt area என்று சொல்வார்கள், அமைச்சர்கள் மத்தியில் சொல்லுகிற நேரத்தில் அதை belt area என்று சொல்வார்கள்.

Corporation-ஐ சுற்றியிருக்கிற 16 கி.மீ. தூரத்திற்கு பட்டா வழங்கக்கூடாது என்று இருந்ததை மாற்றி, இன்றைக்கு சென்னை போன்ற மாநகராட்சிகளில் இருக்கிற பகுதிகளுக்கு,



77 ஆயிரம் நபர்களுக்கு, 30 ஆண்டு காலம், 40 ஆண்டுகாலம் குடியிருந்தவர்களுக்கு பட்டா வழங்கியவர் எங்களுடைய தலைவர் அண்ணன் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைக்கு உதவுகிறவராக, ஏழை வீடு இல்லாமல் இருக்கக்கூடாது; இடமிருந்தால்தானே வீடு கட்ட முடியும் என்ற உணர்வோடு இடங்களை வாரி வழங்கியவர் எங்களுடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**ஏழைகளின் கண்ணீரை துடைத்தவர் எங்கள் தலைவர்!**

அதேபோல, அமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசு ஏற்கெனவே ஆயிரம் கோடி ரூபாய் நிதியை வழங்கியிருப்பதாக பெருமையோடு இங்கே தெரிவித்தார்கள். அது வருடாவருடம் கொடுக்கும் பணம்தான். வருடாவருடம் நமக்குக் கொடுக்கும் பணம்தான் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் ஒன்றும் அதிகப்படியாக வாங்கிவிடவில்லை. ஏற்கெனவே நம்முடைய தமிழ்நாட்டிற்கு பேரிடர் மேலாண்மை நிதியாக அதிகப்படியான நிதி ஒன்றிய அரசிடமிருந்து வரவேண்டி இருக்கிறது. அமைச்சர் அவர்கள் முடிந்தால் அதையெல்லாம் வாங்கிக் கொடுப்பீர்கள் என்று சொன்னால், மிகுந்த சந்தோஷம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எங்களுடைய ஆட்சிக் காலத்தில் 2021-2022 ஆம் ஆண்டுகளில் கனமழை வந்தது. 2023 ஆம் ஆண்டில் மிக்ஜாம் புயல் வந்தது. 2023 ஆம் ஆண்டு தென் மாவட்டங்களிலே வெள்ளப்பெருக்கு வந்தது. 2024 ஆம் ஆண்டு பெஞ்சால் புயல் வந்தது. இதற்கெல்லாம் அப்போதிருந்த எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசாங்கத்திடமிருந்து 50,000 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு நாங்கள் பணம் கேட்டோம். ஆனால், அவர்கள் கொடுத்தது 1,151 கோடி ரூபாய்தான் கொடுத்தார்கள். ஆனால், நாம் செலவழித்தது 13,235 கோடி ரூபாய் நாம் செலவழித்தோம். இந்தப் பணம் நம்முடைய கஜானாவிலிருந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வாரி வழங்கினார்கள். புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஆராயிரம், ஆராயிரம் வழங்கியவர். அதேபோல, விழுப்புரம் பகுதியிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் வழங்கியவர்கள். எங்களுடைய மாவட்டம் போன்ற சிறிய பாதிப்பு இருக்கின்ற பகுதிகளுக்கெல்லாம் ஆயிரம் ரூபாய் வழங்கியவர். இப்படி எல்லா வகையிலும் ஏழைகளின் கண்ணீரைத் துடைத்த தலைவராக எங்களுடைய தலைவர் இருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, நிலத்தை மீட்பது. சகோதரர் செங்கோட்டையன் அவர்களுக்குத் தெரியும். தோட்டக்கலை சங்கம் உங்களுக்கும் எனக்கும் பரிச்சயமான இடம். தோட்டக்கலை சங்கம் எத்தனை ஆண்டு காலம் மீட்க முடியாமல் இருந்தது. அதை மீட்டு எடுத்தவர் எங்களுடைய தலைவர் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, Race Course. சென்னை Race Course 160 ஏக்கர். மிகப் பெரிய இடம். அது பொது மக்களினுடைய பயன்பாட்டிற்கு வர வேண்டுமென்று சொல்லி, அதையும் மீட்டு எடுத்தவர் எங்களுடைய தலைவர் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, ஊட்டியில் இருக்கிற Race Course. அதையும் மீட்டு எடுத்தவர் எங்களுடைய தலைவர் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் மீட்டெடுத்து பொது மக்களினுடைய பயன்பாட்டிற்கு கொண்டுவந்தவர் எங்களுடைய தலைவர் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**தேடிப் பார்த்தாலும் ஒன்றும் இல்லை!**

ஓய்வூதியம் நாங்கள் ரூ.1,200 கொடுத்திருக்கிறோம். நீங்கள் ரூ.3,000 கொடுக்கிறோம் என்று சொன்னீர்கள். இந்த வரவு-செலவு பட்ஜெட்டில் நீங்கள் ஏதாவது சொல்வீர்கள் என்று எதிர்பார்த்தேன். 20 ரூபாயில் ஆரம்பித்தது இந்தத் திட்டம். பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்டம். இன்றைக்கு ரூ.1,200 வரை உயர்த்தியவர் எங்களுடைய தலைவர் அண்ணன் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நீங்கள் 3,000 ரூபாய் தருகிறோம். முதியோருக்கு 3,000 ரூபாய் தருகிறோம். மாற்றுத்திறனாளிகளுக்கு 3,000 ரூபாய் தருகிறோம். படித்துவிட்டு வேலையில்லாமல் வீட்டிலே இருப்பவர்களுக்கு 4,000 ரூபாய் தருகிறோம். இதையெல்லாம் சொல்லியவர்கள் நீங்கள். இந்த பட்ஜெட்டில் இதெல்லாம் இருக்குமாயென்று சொல்லி, பொது பட்ஜெட்டிலும் பார்த்தோம். இந்த பட்ஜெட்டிலும் தேடித் தேடிப் பார்த்தோம். ஒன்றும் தெரியவில்லை. ஆனால் எங்களைப் பொறுத்தளவிற்கு எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் எதைச் சொன்னாரோ அதையெல்லாம் சாதித்துக் கொண்டிருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கும் நான் சொல்கிறேன். எங்களுடைய ஆட்சி வந்திருக்குமென்று சொன்னால், நாங்கள் இரண்டாயிரம் ரூபாய் தருவோம் என்று சொன்னோம். வந்திருந்தால் கொடுத்திருப்போம்.

நாங்கள் சொன்னதும் உண்மை; நாங்கள் கொடுக்க காலதாமதம் ஆனதும் உண்மை. ஆனால், எதற்காக? நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே கொரோனா இருந்தது. கொரோனா இருந்தாலும், 4 ஆயிரம் ரூபாய் ஒவ்வொரு ration card-க்கும் கொடுத்தவர் எங்களுடைய தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) கொரோனா இருக்கிறது என்று சாக்கு சொல்லி தப்பிக்கவில்லை. அதையும் கொடுத்தார், இன்னும் கொடுத்திருப்பார். மக்களுக்கு செய்வதில்தான் எங்களுக்கு ஒரு சந்தோஷம். (குறுக்கீடுகள்)

**ஏதாவது ஒன்று வருமா?**

கொரோனா காலத்திலே அரசினுடைய நிதி நிலைமை எப்படியிருந்தது என்பதெல்லாம் நீங்கள் அறியாத இரகசியம் ஒன்றுமல்ல. அந்தக் கஷ்டத்திலேகூட, 4 ஆயிரம் ரூபாய் வழங்கினார்கள். எங்களுக்கு என்ன பிரச்சினை என்று சொன்னால், எங்கள் பக்கத்தில் இருப்பவர்களிடம் போய், ஏன் அய்யா எங்களுக்கு ஓட்டுப் போடவில்லை, நாங்கள் உங்களுக்கு நிறைய செய்திருக்கிறோமே, எங்கள் தலைவர் இதையெல்லாம் செய்திருக்கிறாரே என்று கேட்கும்போது, அவர்கள் என்ன சொல்லிவிட்டார்கள் என்றால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வந்தால், எங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். நான் வீட்டில் இருந்தால் 4 ஆயிரம் ரூபாய் கிடைக்கும், எங்கள் அம்மாவிற்கு 3 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். இதையெல்லாம் கணக்குப் போட்டு, மாதம் 10 ஆயிரம் ரூபாய் கிடைக்கும், 6 சிலிண்டர்களும் கிடைக்கும். நீங்கள் வந்தால் கொடுப்பீர்களா? அதற்காகத்தான் ஓட்டு போட்டோம் என்றார்கள். அதில் ஏதாவது ஒன்று வருமா என்று நாங்கள் தேடி, தேடிப் பார்த்தோம். பொது பட்ஜெட்டிலும் பார்த்தோம். நாங்கள் மக்கள் மத்தியில் கொள்கையைச் சொல்லி, (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், நான் சொல்லிக் கொள்கிறேன். நான் ஒன்றும் சொல்லவில்லையே, சண்டை போடவில்லையே. (குறுக்கீடுகள்)

பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர், சகோதரர் செங்கோட்டையன் அவர்கள் சொன்னதுபோன்று, ஒருசில இடங்களில் தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். நாங்கள் வழங்கியது 27 இலட்சம் பட்டாக்கள். அப்போது தவறுகள், . . . (குறுக்கீடுகள்)

நீங்களும் பட்டா வழங்கப்போகிறீர்கள். பட்டாக்கள் வழங்கப்போவதாக தெரிவித்திருக்கிறீர்கள். அமைச்சர் அவர்கள் இத்தனை ஆண்டுகாலம் சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். என்ன நடக்கும் என்பது உங்களுக்கும் தெரியும். நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் இடங்களில் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. அந்தப் பட்டாக்களுக்கான இடங்களை survey-க்கு சென்று அளந்து, ஒதுக்கீடு செய்து வழங்கப்பட வேண்டும். அந்தப் பணிகளை எங்கள் அரசாங்கம் ஒழுங்காக, செய்திருக்கிறது; மனநிறைவுடன் செய்திருக்கிறது. அவற்றில் ஏதேனும் இருந்தால் நீங்கள் பாருங்கள்.

இன்னொன்று, வனத் துறை அமைச்சர் தம்பி அவர்கள் எங்கள் தலைவர் அவர்களைப் பேர்சொல்லி அழைத்தார்கள். (குறுக்கீடுகள்) சரி, இல்லை.

**கலைஞருக்கு நன்றி சொல்ல வேண்டாமா?**

நேற்றையதினம், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சென்னைக் கோட்டையில் கொடி ஏற்றினார்கள். அந்தக் கொடி ஏற்றும் வாய்ப்பினை வாங்கிக்கொடுத்த புண்ணியவானே, கலைஞர் அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கோர் நன்றி வேண்டாமா? (மேசையைத் தட்டும் ஒலி) நேற்று, கோட்டையில் கொடி ஏற்றிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கு அமர்ந்திருக்கின்றார்கள். நீங்கள் அனைவரும் அந்நிகழ்ச்சியில் முன்னால் அமர்ந்திருந்ததை நாங்கள் அனைவரும் தொலைக்காட்சியில் பார்த்தோம். நீங்கள் அந்த ஒரு சந்தோஷத்திற்காகவாவது கலைஞரைப் பாராட்ட வேண்டும். கலைஞர் இருந்திராவிட்டால், இந்தியாவில் எந்த முதலமைச்சரும் சுதந்திர தினத்தன்று கொடி ஏற்றியிருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் சொல்லவேண்டுமானால், . . . (குறுக்கீடு)

அதேபோன்று, புயல் மற்றும் வெள்ளம் ஏற்பட்ட நேரத்தில், எங்களது முதலமைச்சருக்கு இணையாக யாராவது பணியாற்றியிருக்க முடியுமா என்று கேட்டால், நிச்சயமாக முடியாது. எனக்கு 50 ஆண்டுகால அனுபவம் இருக்கிறது. (குறுக்கீடு)

பேரவைத் தலைவர் அவர்களே, இரவு 12 மணியானாலும், 1 மணியானாலும், மழை மற்றும் வெள்ளம் வரும் காலங்களில், அமைச்சர்களையும், அதிகாரிகளையும் அவ்விடங்களுக்கே அழைத்துச் சென்று நிவாரணங்களை வழங்கியவர், எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அண்ணன் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னையில் மட்டுமல்ல, தென்மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களிலும், வெள்ளம் ஏற்பட்ட காலங்களில், அவ்விடங்களுக்கும் சென்றார்கள். எங்கெல்லாம் பாதிப்பு மற்றும் வறட்சி ஏற்பட்டனவோ அங்கெல்லாம் சென்றார்கள்.

**பேரிடர் காலத்தில் மக்களை காப்பாற்றியவர்!**

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், முதன்முதலில் அரசாங்கத்தில் நம்முடைய தமிழ்நாடு அரசாங்கத்தில் எங்களுடைய தலைவர் அண்ணன் தளபதி அவர்கள்தான், இந்த வெப்ப அலைக்கு என்று ஒரு சட்டமே போட்டார். அதைத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்களை வைத்து நீங்கள் release செய்திருக்கிறீர்கள். வெப்ப அலைக்கு என்று ஒரு சட்டம் நாங்கள்தான் போட்டோம். Minutes எடுத்துப் பாருங்கள். இதையெல்லாம் எது வரும் என்று சிந்தித்த முதலமைச்சர். வெள்ளம் வருகிறதா உடனே கூட்டம் கூட்டி அந்தந்த அதிகாரிகளை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அங்கே மேற்பார்வையிட இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டவர் எங்களுடைய தலைவர் அண்ணன் தளபதி அவர்கள். ஒவ்வொரு காரியமாக இருந்தாலும், எதையும் சிந்தித்து முன்கூட்டியே பாதிப்பு வராத அளவிற்கு, காரணம் ஏன் சொல்கிறேன் என்றால், எங்களுடைய காலத்தில் ஐந்து தடவை பேரிடர் வந்திருக்கிறது. ஐந்து தடவையும் எந்த சேதாரமும் இல்லாமல் இந்தத் தமிழ்நாட்டை காப்பாற்றியவர் எங்களுடைய தலைவர் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, எதையும் சீர்நோக்கிப் பார்க்கக்கூடியவர்கள். அனுபவம் சட்டமன்ற உறுப்பினர், அதற்கு பின்னால் மேயர், அதற்குபின் துணை முதலமைச்சர், முதலமைச்சர் என்று எல்லா வகையிலும், அனுபவம் இருக்கிற காரணத்தினால் அதையெல்லாம் செய்து கொடுத்த, மிகப் பெரிய, மிகப் பெரிய ஒரு தலைவராக எங்களுடைய தலைவர் விளங்கினார்கள்.

இன்னொன்று சென்னையில் belt area நீங்கள் officers-டம் கேட்கலாம். சென்னை, திருச்சி Corporation area எல்லாம், அந்த காலத்தில் 1962-ல் காங்கிரஸ் காலத்தில் ஒரு G.O. போட்டிருக்கிறார்கள். அது நல்ல எண்ணத்துடன்தான் அப்போது போடப்பட்டது. சென்னைக்கு விரிவாக்கம் வருகிற நேரத்தில் இடம் இல்லாமல் போய்விடும் என்று, அன்றைக்கு 1962-ல் ஒரு G.O. இருந்தது. ஆனால், 1962-லிருந்து மக்கள் அந்த இடங்களில் குடியிருந்து வீடுகட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் முதலமைச்சர் அவர்களைப் பார்த்து, நாங்கள் எங்கே போவது என்று கேட்ட நேரத்தில் அவர்களுடைய கண்ணீரை துடைத்து, 1997 G.O. என்று ஒரு புதிய சட்டத்தை போட்டு Cabinet-ல் approval வாங்கி 77 ஆயிரம் பேருக்கு தமிழ்நாடு முழுவதும் Corporation பணியில் இருக்கிற அனைவருக்கும் பட்டா வழங்கியவர் எங்களுடைய தலைவர் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஏன் சொல்கிறேன் என்றால், சிரமங்கள் வருகிற நேரத்தில் அந்தக் கண்ணீரைத் துடைக்கிற கையாக எங்களுடைய தலைவர் கை இருந்திருக்கிறது. அது பட்டா வழங்குவதாக இருந்தாலும் சரி, புயல் வெள்ளமாக இருந்தாலும் சரி, மானியம் கொடுப்பதாக இருந்தாலும் சரி, விவசாயிகளுக்கு புதிய மானியம் கொடுப்பதாக இருந்தாலும் சரி, சமூக நலத் திட்டங்களாக இருந்தாலும் சரி, நாம் சொல்லி கேட்பதை விட அவராக கொடுக்கக்கூடிய வள்ளலாகத்தான் எங்களுக்கு இருந்திருக்கிறார்கள். அவருடைய ஆட்சியில் மக்கள் சிறப்பாக இருந்திருக்கிறார்கள். அந்த ஆட்சி மீண்டும் வரும். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் வரும். அப்படி வருகிற நேரத்தில் நீங்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. அப்பாவை காணோம் என்று சொல்கிறீர்கள். அவர் வருகிற நேரத்தில் பல பேர் நீங்கள் இங்கு இருக்க மாட்டீர்கள். நாங்கள் இருப்போம் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) நன்றியோடு அமர்கிறேன்.

ஒரு சட்டமன்ற உறுப்பினரோடு தி.மு.க இந்தச் சட்டமன்றத்தில் இருந்த வரலாறு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரேயொரு சட்டமன்ற உறுப்பினரோடு, எப்படி விழுமோ விழுந்த வேகத்திலே அப்படியே எழுந்திருக்கக்கூடிய கட்சிதான் தி.மு.க. (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பேசினார்.